
هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:



# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

1- முதியவரின் மனம் கூட இரண்டு விஷயங்களில் இளமையாகவே இருந்து வரும்:

1. இம்மை வாழ்வின் (செல்வத்தின்) மீதுள்ள பிரியம்.
2. நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற ஆசை.

(நூல்-புஹாரி 6420)

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

**2**- மனிதர்களில் அதிகமானோர் இரண்டு அருட்செல்வங்களின் விஷயத்தில் இழப்புக்குள்ளாகி விடுகின்றனர்:

1. ஆரோக்கியம்.
2. ஓய்வு.

(நூல்-புஹாரி 6412

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

## 3- அல்லாஹ் விரும்பும் இரு பண்புகள்:

1- சகிப்புத்தன்மை (அறிவாற்றல்)

2- நிதானம்.

(நூல்-முஸ்லிம் 25)

## 4- சாபத்திற்குரிய இரு செயல்கள்:

1- மக்களின் நடைபாதையில் மலம் கழிப்பது.

2- மக்களின் (ஓய்விடங்களான) நிழல்களில் மலம் கழிப்பது.

(நூல் —முஸ்லிம் 448)

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

5-தொழுகையில் இருக்கும் போது இரண்டைக் கொள்வதற்கு நபியவர்கள் ஏவினார்கள்:

**1- பாம்பு , 2- தேள்**

(நூல் -திர்மிதி 390)

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

6 – குளிர்ந்த இரு நேரத் தொழுகைகளைத் தொழுபவர் சுவனம் நுழைவார்:

**1- ஃபஜ்ர் , 2- அஸ்ர்**

(நூல் –புஹாரி 574)

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

7-

## நரகம் தீண்டாத இரு கண்கள்:

1- அல்லாஹ்வின் அச்சத்தால் அழுத கண்கள்

2- அல்லாஹ்வின் பாதையில் விழித்திருந்த கண்கள்

(நூல் –திர்மிதி 1639)

# நபி மொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

8-

## மக்களிடம் உள்ள இரு குணங்கள் இறை மறுப்பாகும்:

1. பரம்பரையைக் குறை கூறுவது.

2- இறந்தவருக்காக ஒப்பாரிவைப்பது.

(நூல்- முஸ்லிம் 121)

9-

# மனிதர்களை அதிகம் சுவர்க்கத்தில் நுழைவிக்கும் இரண்டு:

1- இறையச்சம்

2- நற்பண்புகள்

( நூல் -இப்னு மாஜஹ் 3443)

نبي مொழிகளில் இடம் பெற்ற இரண்டு:

# 10-

## மனிதர்களை அதிகம் நரகில் நுழைவிக்கும் இரண்டு:

1- நாவு , 2- பிறப்புறுப்பு

(நூல்-இப்னு மாஜஹ் 3443)